முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் மெய்ப்பொருள் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

08.01.2019, செவ்வாய்க்கிழமை

1. **யோக சித்தே அரங்கராசா**
**உயர் உலகம் படைக்க வந்த**
**யோகியே ஞான தேசிகா**
**உலகில் உன் பெருமை கூறி**

2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி சிலை திங்கள்**
**தெரியவே அறுநான்கு திகதி குசன் வாரம்**
**தேசிகனுக்கு மெய்ப்பொருள் நாயனார் யானும்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 24ம் நாள் 08.01.2019, செவ்வாய்க்கிழமை)**

3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர் ஞானம் வளர்த்து வரும்
ஞான வழிகளை மக்களெல்லாம்
ஞாலமுடன் ஏற்று வருக

4. வருகவே உலக மக்களுள்
வடிவேலனார் அருள் தயவு பெருகி
மாறுதலும் ஞானிகள் துணைபட
மகத்துவமான ஏற்றமும் காண்கும்

5. காண்கவே சுத்த சைவ நெறி
கட்டுப்பாட்டை உருவாக்கும் தெய்வநெறி
ஆன்மீக பண்புகள் வளர்க்கும்
அருள் ஞான நெறி யோக நெறி

6. நெறிதனை ஏற்று வருக
நீதி நெறி குன்றா சமூகம்
வறுமை காணா சமுதாயம்
வளமிகுந்த இயற்கை பலமுடன்

7. பலமான ஞானிகள் ஆட்சியாக
பாலதண்டாயுதன் ஆட்சி அமையும்
சலனமுற்று கட்ட நட்டமென
சதா துன்பம் கலந்த மக்களே

8. மக்களே ஞான ஆட்சி அமைய
மன்னர் தகுதி கொண்டவர்களும்
பக்குவமாம் பரிபக்குவம் பெற
பரோபகாரம் வளர்க்க வேண்டி

9. வேண்டி அரங்க ஞானியே
வேலவா அவதார தவசியே என
தொண்டு செய்து கலந்துமே
தினமும் பூசை செய்ய வேண்டும்

10. வேண்டியே தரும பாதையை
விடாது தொடர வேண்டும்
கண்டுரைக்க அரங்க மகானை
கலியுகத்தில் ஏற்ற மக்களே

11. மக்களே மகத்துவம் கூடியே
மாதவ பலனை அடைந்து
தேக்கமிலா ஞானியாவர்
தெரிவித்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் மெய்ப்பொருள் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

யோக ஞான சித்தனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உயர் ஞான உலகம் தனை படைத்து உலகோரை காத்திடவே வந்துதித்த ஞானயோகியே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியே அற்புதமான உனது பெருமைகளை உலகமெலாம் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 24ம் நாள் 08.01.2019, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல் தனையே மெய்ப்பொருள் நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் மெய்ப்பொருள் நாயனார்.

உலகமெலாம் மேன்மைமிக்க உயர் ஞானம் தனை வளர்த்து வருகின்ற அரங்க மகானின் உயர் ஞான கொள்கைகளை தூய நெறிமுறைகளை உலக மக்களெல்லாம் ஞானமுடன் ஏற்றுக்கொண்டு தொடர்ந்து பின்பற்றி வரவர, வருகின்றோரெல்லாம் முருகப்பெருமானின் அருள் தயவினை பெற்று நல்ல மாறுதல்களையும் ஞானிகளின் துணையுடன் நல்ல உயர்வையும் காண்பார்கள்.

உயிர்க்கொலை தவிர்த்து புலால் மறுத்து சுத்த சைவ உணவை மேற்கொள்ளும் சுத்த சைவ நெறியானது மனிதருள் நல்ல கட்டுப்பாட்டை உருவாக்கும் தெய்வீக நெறியாகும். ஆன்மிகப் பண்புகளை வளர்க்கும் அருள் ஞான நெறியாகும். அதுவே யோக நெறியுமாகும்.

ஆதலினால் சுத்த சைவ நெறியை ஏற்று மக்கள் கடைப்பிடித்திட நீதி நெறி குன்றாத சமூகம் வளர்ந்து வறுமையற்ற சமுதாயமாக வளம் மிகுந்திட்ட இயற்கை பலமுடன், பலம்மிக்க ஞானிகளின் ஆட்சியாக ஞான ஆட்சியாக இவ்வுலகினில் ஞானபண்டிதன் முருகப்பெருமான் தலைமையில் உண்டாகிடும்.

எக்காலத்தும் மனசலனத்துடன் வாழ்ந்தும் கஷ்டங்கள் என்றும் பலவித நஷ்டங்கள் என்றும் சதா துன்பமிக்க வாழ்வினை வாழ்ந்து வருகின்ற கலியுக மக்களே இவ்வுலகினில் துன்பமில்லா நல்வாழ்வுமிக்க ஞான ஆட்சி அமைந்திட மன்னர் போன்று ஆட்சி செய்யும் தகுதி படைத்திட்ட ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் பக்குவம் மிக்கவர்களாய் பரிபக்குவம் பெற்றிட வேண்டும். பக்குவமாய் பரிபக்குவத்தை பெற்றிடவே அவர்களெல்லாம் பரோபகாரத்தினை வளர்த்திட வேண்டும்.

பரோபகாரம் உங்களுள் பெருகிட அவரவரும் பரோபகார ஞானி ஜீவதயவே வடிவான முருகப்பெருமானின் அவதார ஞானி ஆறுமுக அரங்கமகாதேசிகனாரை போற்றிப் பணிந்து மகா தவசியே, எங்களை மீட்க வந்த கலியுக ஞானியே என பயபக்தி விசுவாசத்துடன் பணிந்து, திருவடி பணிந்து தளராமல் தொண்டுகளைச் செய்து வரவேண்டும். அரங்கன் காட்டும் தர்மத்தின் பாதையை தவறவிடாமல் தொடர்ந்து பற்றிக்கொண்டு தயங்காமல் தர்மங்களைச் செய்து வர வேண்டும்.

இவ்விதமே ஆறுமுக அரங்கமகானை குருவாய் கலியுகத்தினில் ஏற்றுக்கொண்ட மக்களே மகத்துவம் மிக்கவர்களாய் அவர்கள் செய்த தொண்டுகளினாலும், தர்மத்தினாலும் மாபெரும் தவங்களை செய்த மாதவ பலன்களை பெற்று தடையின்றி ஞானிகளாக ஆகிவிடுவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் மெய்ப்பொருள் நாயனார்.

–சுபம்–